9th November 1961]

Polio-myelitis

*** 1935 *Q*.—SRI S. M. ANNAMALAI :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இளம்பிள்ளை வாதத்தைப் போக்க சர்க்கார் இதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Polio-myelitis is not prevalent in an epidemic form in this State. Stray cases, when they occur, are isolated and treated in hospitals. Concurrent disinfection procedures and preventive measures are also adopted to avoid the spread of the disease.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த வியாதியினால் அநேக சிறு குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது ஒரு பூச்சியின் மூலமாக வருகிறது. தொத்து நோய் என்றும் சொல்லுகிறார்கள். இது பாதிக்கப்பட்டவர்கள் தனியாக இருக்கவேண்டும், தனியாக வைத்திருந்தால், மேலும் நோய் பரவாமல் தடுக்க முடியும். அதோடு சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்கவேண்டும், பாதிக்கப்பட்டிருப்பவர்களை ஜாக்கிரதையாக கவனித்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் மற்றவர்களுக்கு பரவாதபடி தடுத்துக்கொள்ளலாம். வியாதி வந்துவிட்டால், மருந்து கொடுத்துத்தான் சிகிச்சை செய்ய வேண்டும்.

SRI M. S. SELVARAJAN : இந்த இளம்பிள்ளை வாத நோய் ஏற்பட்டிருக்கக்கூடியவர்களுக்கு சிகிச்சை செய்யக்கூடிய ஆர்தோபோடிக் ஸெண்டர்ஸ்களுக்கு ராஜ்ய சர்க்காரினால் ஏதாவது உதவி செய்யப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தமாதிரி நோய் வந்து உறுப்புகள் உபயோகமில்லாது போனால் உதவி செய்வதற்கான ஏற்பாடு இருக்கிறது. அதை இன்னும் விஸ்தரிப்பதற்கும் யோசனை இருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, may I know whether there is any proposal to vaccinate the school going children with Dr. Salk's serum?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, that is also being considered.

SRI V. SANKARAN : நோய் வந்த பிறகு என்னென்ன ப்ரிக்காஷன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது. இந்த நோய் என்னென்ன காரணங்களினால் வருகிறது, இதைத் தடுக்க என்னென்ன விதத்தில் முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பார்த்து சர்க்கார் அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சுகாதார விதிகளை அனுசரித்தால் கூடுமான வரையில் இதைத் தடுக்கலாம். (சிரிப்பு.)